# காப்பியடிக்கும் நவீன முஜ்தஹிதுகள் !!!

## அஷ்ஷைக் எம்.ஜே.எம். ரிஸ்வான் மதனி

இஸ்லாம் அல்லாஹ்வின் வேதங்கள் மூலம் நிலை நிறுத்தப்பட்டன. நபிமார்கள் அல்லாஹ்வின் வழிகாட்டலின்படி தமது அறிவுரைகள், விளக்கங்கள் ஊடாக அவைகளை மக்களைச் சென்றடையச் செய்தனர், அவை அவ்வப்போது எழுதி வைக்கப்பட்டாலும், நபிமார்களின் மரணத்தின் பின்னால் காலப்போக்கில் அவை அழிந்து போயின, அவற்றின் அசலான கருத்துக்கள் அவற்றைக் கற்றறிந்த போதகர்களால் சிதைக்கப்பட்டன, அதனால் அவைகாலாவதியான நிலைக்குள்ளாகியது மட்டுமின்றி, அவை உத்தரவாதத் தன்மையையும் இழந்துவிட்டன. இது முன்னைய வேதங்களின் நிலை.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆனுக்கு அந்த நிலை கிடையவே கிடையாது. அது அவ்வப்போது நம்பமகமான எழுத்தாளர்களால் எழுதப்பட்டு, மணனமும் செய்யப்பட்டது. வரலாறு நெடுகிலும் அதை மணனம் செய்தோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது.

இரண்டாவது மூலாதாரமான நபிகள் நாயகத்தின் வழிமுறையான அஸ்ஸுன்னா நபித்தோழர்களால் வாய்வழியாவும், நூல்வழியாகவும் பாதுகாக்கப்பட்டது.

அவர்கள் தமக்குள் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கும், மக்கள் தமது பிரச்சினைகளுக்குமான தீர்வாக அவ்விரண்டு மூலாதாரங்களையும், நாடிச் சென்றனர்.

அவ்விரண்டிலும் காணப்படாத அம்சங்களுக்கான தீர்வை அவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட பெரும்பாண்மை அறிஞர்களின் அங்கீககாரத்தைப் பெற்ற **இஜ்மா- வின்** அடிப்படையிலும், **கியாஸ்** என்ற அனுமான விளக்கத்தின் அடிப்படையிலும் தமது கவனத்தைத் திருப்பினர். அவ்விரண்டையும் துணை மூலாதாரங்கள் என்று பிற்காலத்தில் அழைத்தனர்.

தற்போது நடைமுறைகளில் காணப்படுகின்ற பிரிவுகள் நபிகள் நாயகத்தின் காலத்தில் இருக்கவில்லை, ஸஹாபாக்கள் அவை பற்றி அறியவும்மாட்டார்கள். அலி (ரழி) அவர்களின் ஆட்சியில் ஹி:35ற்கும் பிற்பட்ட காலத்தில்தான் குர்ஆன் சான்றுகளை ஆதாரமாகக்காட்டி மக்களை வழிகெடுத்தனர். அதற்கும் ஸஹாபாக்களில் மிகப்பெரும் அறிஞர்கள் அதை முறியடித்தனர்.

ரித்தா- மதம் மாறியோர் விஷயத்திலும், குர்ஆனை ஒன்றுதிரட்டுவதிலும் அபூபக்கர் (ரழி) அவர்களின் பார்வையையும், ஹவாரிஜகளின் வாதத்தை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் முறியடித்ததையும், கத்ரை மறுப்போரின் சிந்தனையை இப்னு உமர் (ரழி) அவர்கள் மறுத்துரைத்ததையும், குர்ஆனுக்கு பொய்யான விளக்கம் அளித்த போது இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் பதில் அளித்ததையும் சுட்டிக்காட்ட முடியும்.

எந்தக்கலைகளும் தோற்றம் பெறாத காலத்தில் பிற்காலத்தில் வருவோர் உபயோகிப்படுத்துகின்ற அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்ட தீர்வாக அவர்களின் தீர்வுகள் அமைந்திருந்தது என்பதே உண்மை.

நபித்தோழர்கள் வஹியின் காலத்தில் வாழ்ந்தவர்கள், அதை ஆழமாகப்படித்தவர்கள் என்ற வகையில் உண்மையில் இவ்வாறான முடிவுகள் அவர்களிடம் இருந்து வெளிப்படுவது ஆச்சரியமான ஒன்றல்ல. ஆனால் அவர்களைவிட நாம் சிறந்த அறிவாளிகள் என்று உடன்பாடான அவர்களது கருத்துக்களை மறுத்து, தனிமதக் கோட்பாடுகளை நிலை நிறுத்த முயலுவதுதான ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

மக்கள் நபித்துவக் காலத்தை விட்டும் தூரமாகிய போது கருத்துக் குழப்பங்களுடன் விரிவடைந்தன. எனவே அவை எந்தப் பகுதியை அடைப்படையாகக் கொண்டு உருவெடுக்கின்றது என்பதை இனம் கண்டு அவற்றிற்கான சரியான தீர்வை வழங்க வேண்டிய கடப்பாடு நபித்தோழர்களிடம் பாடம் படித்த தாபியீன்களுக்கு இருந்தது.

அதுவே இஸ்லாமிய மார்க்கத்தை அதன் உள்வாரியான எதிரிகளிடம் இருந்து பாதுகாத்திட ஒரே வழி எனக்கண்டனர். அதற்கான முடிவுகள் கலந்துரையாடல்கள், அமர்வுகள், போதனைகள், விவாத அரங்குகள், அறிவிப்பளார் விமர்சனங்கள் எனத் தொடர்ந்தது.

அவை ஒவ்வொன்றிற்குமான அறிஞர்கள் பெருமக்கள் உருவாகினார்கள், அவர்கள் தமது முயற்சிகளையும், முடிவுகளையும் தமக்குரிய மாணவ வட்டங்களால் பதிவு செய்தார்கள். பிற்காலத்தில் அவை அவர்களின் பெயர்களில் தனியான நூல்களாக வெளிவந்தன.

அவை நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் காலத்தில் நூல்வடிவில் தொகுக்கப்பட்டிருக்கவில்லை. தப்ஸீர், ஹதீஸ், ∴பிக்ஹ், வரலாறு, ஹதீஸ் திரணாய்வு போன்ற எந்தக் கலையும் நூல்வடிவம் பெற்றதாக இருக்கவில்லை. அவற்றை சிரமங்கள் பல சுமந்து இமாம்களே நூல்வடிவத்தில் கொண்டு வந்தவர்கள்.

அவர்களில் யார் எந்த துறையில் முன்னணி வகித்தார்களோ அவர்கள் அந்தப் துறையின் பெயர் கொண்டு முபஸ்ஸிர், முஹத்திஸ், ∴பகீஹ், முஅர்ரிஹ் என இவ்வாறு அழைக்கப்பட்டனர். இவர்களில் சிலர் பல கலைகளையும் கற்ற அறிஞர்களும் இருந்தனர்.

மனிதர்கள் என்ற வகையில் இவர்கள் தமது ஆய்வில் சில போது குறை செய்தனர் என்பது கண்டறியப்பட்டாலும் அது ஒரு இசுவாகக் கொள்ளப்படுவதில்லை. ஏனென்றால் இவர்கள் நபி (ﷺ) அவர்களின் பின்வரும் புகழுராத்திற்குச் சொந்தக்காரர்கள்.

إِنَّ اللَّهَ يَبْعَثُ لِهَذِهِ الْأُمَّةِ عَلَى رَأْسِ كُلِّ مِائَةِ سَنَةٍ مَنْ يُجَدِّدُ لَهَا دِينَهَا– سنن أبي داود –

ஒரு நூற்றாண்டில் ஒரு முஜ்தஹித் வருவார், அவர் அந்த சமூகத்தவரின் மார்க்கத்தை புத்துயிர் அளிபபார். (இந்த உம்மத்தினரால் சீரழிக்கப்பட்டதை சீராக்குவார்) (அபூதாவூத்) என்ற நபிமொழியின் அடிப்படையில் பல முஜ்தஹிதுகள் முஸ்லிம் உலகில் தோன்றி சீர் செய்து மரணித்தனர், தோன்றுவார்கள் என்ற முன்னறிவிப்பைக் கொண்டுதான் முஜ்தஹிதுகள் பலர் தோன்றி மறைந்தது போன்று, தோன்றி மறைவார்கள் என்று விளங்குகின்றோம்.

இந்த அடிப்படையைத் தழுவித்தான் உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) அவரகள் அவர்களிடம் காணப்பட்ட ஆழமான மார்க்க அறிவின் தகமையின் அடிப்படையில் முதலாம் நூற்றாண்டு முஜ்தஹித் என்றும், இமாம் ஷா.ஃ.பி (ரஹ்) அவர்களை இரண்டாம் நூற்றாண்டின் முஜாஹித் என்றும் குறிப்பிவார்கள். (முஸ்தத்ரக் அல்ஹாகிம்) இது உலகில் எல்லாப் பகுதியிலும் இருந்தும் தோன்ற முடியும் என்றுதான் விளக்கம் தரப்படுகின்றது.

அந்த வரிசையில்தான் இமாம்களான ஹ்மத், புகாரி, முஸ்லிம், திர்திதி, அபூதாவூத், நஸயி, தாரமி, மாலிக், ஹாகிம் , இப்னு குஸைமா, இப்னுமாஜா, இப்னு கஸீர், தஹபி, இப்னுஹஜர், இப்னு அதிய், மக்திஸி, மிஸ்ஸி, தஹாவி, இப்னுல்கைய்யிம், இப்னுதைமிய்யா, முஹம்மத் பின் அப்தில்வஹ்ஹாப், அல்பானி, உஸைமீன் போன்ற அறிஞர்களும், மற்றும் பல அறிஞர்களும் நோக்கப்படுகின்றனர்.

இவர்களின் நூற்களில் இருந்து காப்படியடிக்கும் முஜ்தஹித்களையோ, நாகரீகம், பண்பாடுகள் அற்ற தாயிக்களையோ, நிறைவான அறிவில்லாத தக்லீத் முஜ்தஹிதுகளையோ இதில் உள்ளடக்க முடியாது.

அப்படியானால் **இஜ்திஹாத், முஜ்தஹித்** பற்றிய விளக்கமும், அதற்குத் தகுதியுடையவர்கள் யார், என்பது பற்றிய தெளிவும் நமக்கு அவசியாமானகும். அப்போதுதான் பிறரது நூல்களில் இருந்து காப்படியத்து, அல்லது மற்றொரு அறிஞரின் கருத்தை தனது ஆராய்ச்சியாகவும், முடிவாகவும் வெளியிடுகின்ற அசிங்கமான தக்லீத் நடைமுறையாளர்களை இனம் காண முடியும். மட்டுமின்றி இவர்கள் முஜ்தஹிதுகள் அல்ல, பிற அறிஞரிகளிடம் காப்படியடிக்கும் **முல்லாக்கள்** என்று அறிந்து கொள்ள முடியும்.

## இஜ்திஹாத் என்பது என்ன?

**இஜ்தஹத اجتهد – முயற்சித்தான்- ஈடுபாடுகாட்டினான்** போன்ற வினைச் சொல்லான வார்த்தையில் இருந்து வந்ததுதான் **اجتهاد இஜ்திஹாத்** என்ற **பெயர் வினைச் சொல்லைக் குறிக்கும் சொல்.**

**மொழி அடிப்படையில் இவ்வாறு அர்த்தம் கொள்ளப்படும் இந்தச் சொல்லை** ஒருவர் தனது வாழ்வில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுவதைற்கும் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லாகும். மார்க்க அறிவில் ஆளமும், தெளிவும் உள்ள ஒரு -ஆலிம்- **இஜ்திஹாத்** தேவைப்படுகின்ற விஷயங்களில் மாத்திரம் இஜ்திஹாத்

செய்து குர்ஆன், சுன்னாவிற்கு உடன்பட்டு தீர்ப்பளிப்பதை, அறிவிப்பதை மார்க்கத்தில் இஜ்திஹாத் என்று கூற முடியும். **இஜ்திஹாத்** வேண்டி நிற்கும் அம்சங்கள் பற்றி இங்கு நோக்குவது பொருத்தமாகும்.

**தெளிவான சான்றிலோ, முடிவு செய்யப்பட்ட அம்சத்திலோ இஜ்திஹாத் கிடையாது.**

அடிப்படைகள் எனக் கூறப்படுகின்ற விஷயங்களில் இஜ்திஹாத் செய்கின்றனர் என்றால் அதை நாம் இஜ்திஹாதாகவோ, அவரை முஜ்தஹிதாகவோ ஏற்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக இரவின் மூன்றில் ஒரு பகுதி மீதம் இருக்கின்ற போது அல்லாஹ் கீழ்வானத்திற்கு இறங்குதல், சூனியம் செய்தல் ஏழபெரும்பாவங்களில் ஒன்று, மண்ணறை விசாரணை, தஜ்ஜால் போன்ற அடிப்படையான அம்சங்கள்.

இவை எப்படி சாத்தியமாகும்! பகுத்தறிவிற்குப் பொருத்தமாகத் தெரியவில்லையே எனக் கூறி மு.ஃ.தஸிலாக்கள் மறுத்தனர், இதை நவீன மு.ஃ.தஸிலாக்களும் மறுக்கின்றனர்.

ஏனென்றால் மி.ஃ.ராஜ் நிகழ்வு இரவின் ஒரு துளி நேரத்தில்தான் நடந்தேறி இருக்கின்றது. அந்த நேரத்திற்குள் பல நிகழ்வுகள் நடந்துள்ளது பற்றி அல்குர்ஆனும், ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் குறிப்பிடுகின்றன. அது எப்படி சாத்தியமானது என்ற கேள்வி எழுமானால் அதனை மறுப்பதுதான் பதிலாக அமையும். இப்படி ஒவ்வொன்றிற்கும் ஏற்படும்.

**إِذَا حَكَمَ الْحَاكِمُ فَاجْتَهَدَ ثُمَّ أَصَابَ فَلَهُ أَجْرَانِ وَإِذَا حَكَمَ فَاجْتَهَدَ ثُمَّ أَخْطَأَ فَلَهُ أَجْرٌ - صحيح البخاري**

கற்ற அறிஞர் தீர்ப்பளிக்கின்ற போது இஜ்திஹாத் செய்து, சரியான இலக்கை அடைந்து கொண்டால் அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு, அவர் தீர்ப்பளிக்கின்ற போது இஜ்திஹாத் செய்தும் தவறிழைத்துவிட்டால் அவருக்கு ஒரு கூலி உண்டு என்று நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).

இஜ்திஹாத் பற்றிய ஆய்விலும், முயற்சியிலும் ஈடுபாடுள்ளவர்கள் அதற்குத் தகுதி உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை ஹதீஸ் குறிப்பிடுகின்றது. இது **இஜ்திஹாத்** தேவைப்படும் அம்சமாக இருப்பதை உணர்த்துகின்றது.

முடிவு செய்யப்பட்ட ஒன்றில் இஜ்திஹாத் செய்வதல்ல. முடிவு செய்யப்பட்டதில் இஸ்திஹாத் செய்வதை இஜ்திஹாத் என்று கூறுவதில்லை. மாற்றமாக, அதை குழப்பம் என்றுதான் கூறப்படும்.

இந்தக் கோணத்தில்தான் தொழுகைக்குப் பின்னால் கூட்டு துஆ ஓதுவதும், ஓதாமல் இருப்பதும் சரிதான் என்ற நிலைப்பாடு பற்றிய உலமா சபையின் மாற்றியமைக்கப்பட்ட புதிய தீர்ப்பையும் நோக்க வேண்டும்.

**தகுதி பெற்ற அறிஞராக இருத்தல்.**

**சமுதயாத்தில் மார்க்க விவகாரங்களில் அதிகம் குழப்பமான சூழ்நிலைகளை உருவாக்கியவர்கள் அரைகுறைகளும், இஜ்திஹாதின் நிலையை அடையாதவர்களும்தான் என்கின்றார்கள் அறிஞர்கள்.**

**சூனியம் இருப்பதாக நம்புவோருக்குப் பின்னால் தொழுவது கூடாது,** பெண்கள் தங்க நகை அணிவது கூடாது, கூட்டுக் குர்பானி கூடாது, **கா.்.ப்** அத்தியாயம் மிம்பரில் ஓதாமல் ஜும்ஆத் தொழுகை செல்லாது போன்ற குழப்பங்கள் இந்தக் குறைவின் தெளிவான ஆதாரங்களாகும்.

இந்தக் குழப்பங்களை இறக்குமதி செய்தவர்கள் யார் என்று பார்த்தால் வெறும் பேச்சாளர்கள்தாம். இவர்கள் இஜ்திஹாதின் தராதரத்தை அடைந்த துறைபோகக் கற்ற ஆய்வாளர்கள் கிடையாது. இது பெரும் தாயிகள் எனப்படுவோரிடம் காணப்படும் பாரிய அறிவியல், ஆய்வு சார்ந்த குறை எனலாம். இவ்வாறானவர்களுக்குப் பின்னால் முறுக்கேறிய இளசுகள் கொஞ்சம் வெட்டியாகச் சுத்தித் திரிகின்றன.

வஹியின் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் ஃபத்வாக்களை வழிகேடாக்கி முகல்லிது நாயகம் ஒருவரின் குழப்பமான ஃபத்வாக்களுக்கு அழுத்தம் தந்து, அதை ஏற்க மறுப்போருக்கு எதிராக சொல் வீச்சாலும், நடத்தைகளாலும் ஆர்ப்பாட்டமும், கோஷமும் போட்டு, இணைவைக்காதவர்களையும் இணைவைப்பாளர்களாக சித்தரித்தரிப்பதன் மூலம் தனிமனித தக்லீத் மூலம் யாரோ ஒருவரைக் காப்பாற்றப் படாதுபாடுபடுகின்றனர் என்றே எண்ண வேண்டி உள்ளது.

இதற்கு இமாம் இப்னுல் முன்ஸிர் (ரஹ்) அவர்களின் பின்வரும் கூற்று வலு சேர்க்கின்றது.

قَالَ اِبْن الْمُنْذِر وَإِنَّمَا يُؤْجَر الْحَاكِم إِذَا أَخْطَأَ إِذَا كَانَ عَالِمًا بِالِاجْتِهَادِ فَاجْتَهَدَ ، وَأَمَّا إِذَا لَمْ يَكُنْ عَالِمًا فَلَا ، وَاسْتَدَلَّ بِحَدِيثِ " الْقُضَاة ثَلَاثَة - وَفِيهِ - وَقَاضٍ قَضَى بِغَيْرِ حَقّ فَهُوَ فِي النَّار ، وَقَاضٍ قَضَى وَهُوَ لَا يَعْلَم فَهُوَ فِي النَّار " وَهُوَ حَدِيث أَخْرَجَهُ أَصْحَاب السُّنَن (فتح الباري لابن حجر - (20 / 413)

**இஜ்திஹாத்** பற்றிய அறிஞராக இருந்து, **இஜ்திஹாதில்** தவறிழைக்கின்ற போதுதான் ஒரு கூலியைப் பெறுவார், அவர் அறிஞராக இல்லாத போது அதற்கான கூலியைப் பெற முடியாது. இதற்கு சுனன்கள் என்றழைக்கப்படுகின்ற கிரந்தங்களில் அறிவின்றி தீர்ப்பளிக்கும் காழி நரகம் செல்வார் என்று பதிவு செய்யப்பட்டுள்ள செய்தியை ஆதாரமாகக் கொண்டு கூறியதை கவனிக்க வேண்டும். (ஃபத்ஹுல் பாரி). ஆலிம்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் இறை நியதியாகக் காணப்படுகின்ற அறிவியல் சார்ந்த இந்த வேறுபாட்டை நீக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் அறிகின்றோம்.

இங்கு நாம் ஏழு வருடங்கள் படித்தவர்களையோ, அல்லது உலமா சபையின் அடையாள அட்டைகளைப் பெற்றவர்களையோ, அல்லது பல்கலைக்கழகப் பட்டதாரிகளையோ **இஜ்திஹாத்** தகுதி பெற்ற ஆலிம்கள் என்று குறிப்பிட விளையவில்லை. அவ்வாறே பொது மக்கள் பார்வையில் பாகிஸ்தான், இந்தியா

போன்ற நாடுகளில் படித்த அரபு, தமிழ் மு.ஃபதிகளையோ, முஜ்தஹிதுகளாக மாற்றப்பட்டவர்களையோ குறிப்பிடவுமில்லை.

இவர்களில் தங்களுக்கு முன்னால் வாழ்ந்த அறிஞர்களின் கூற்றுகளைப் படிப்பவர்கள்இருக்கின்றார்கள், அரபு மொழியை மறந்த முல்லாக்களும் இருக்கின்றார்கள், தாம் பேசுவது குர்ஆனும் சுன்னாவும்தான் எனக் கூறிக் கொண்டு தமக்கு முன்னால் வாழ்ந்து மரணித்து பகுத்தறிவு வாதிகளின் வாதங்களை தமது ஆய்வாகவும், முடிவாகவும் வெளியிடுபவர்கள் இருக்கின்றார், இல்லை நாமும் மனிதர்கள், முடியுமான அளவு அறிஞர்களின் நூல்களையும், கருத்துக்களையும் ஆய்வு செய்கின்றோம், அவற்றில் குர்ஆன், சுன்னாவுக்கு நெருக்கமானதை, இறையச்சத்திற்கு நெருக்கமானது எனக் கண்டதை வெளியிடுகின்றோம் என்று தமது பணிவின் அடையாளமான இயலாமையை ஒப்புக் கொள்பவர்களும் இருக்கின்றனர்.

மனிதன் என்ற வகையில் தவறு ஏற்படுவது இயல்பானது என்பதை ஏற்றுக் கொண்டே தாம்மாத்திரம் சரியில் இருக்கின்றோம் என்று தம்பட்டம் அடிக்கும் உமர் அலிக் கோட்பாட்டையுடைய நவீன தக்லீத்வாதிகள் முன்சென்றவர்களிடம் இருந்து அடிக்கின்ற காப்பிகள் இஜ்திஹாத் எனக் கூறுவது நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் எகிப்தில் வாழ்ந்த அபூரய்யா, அஹ்மத் அமீன், ஜமாலுத்தீன் ஆ.ஃப்கானி, ரஷீத் ரிழா, முஹம்மத் அப்துஹு, பாகிஸ்தான் அறிஞர் மௌலானா மவ்தூதி போன்ற பகுத்தறிவும், வஹியின் அறிவும், அறியாமையும் கலந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களின் முழுமையான கருத்துக்களையும், வாதங்களையும், போக்குகளையும் ஒத்த கோட்பாட்டார்கள் குறிப்பாக ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் ஒத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதில் யூசு.ஃப் கர்ளாவி, முஹம்மத் அல்கஸ்ஸாலி போன்ற எகிப்திய அரபு அறிஞர்களும், இவர்களின் நூல்களைப் படித்து அதனால் கவரப்பட்ட அரபு தமிழ் எழுத்தாளர்கள், அழைப்பாளர்கள் போன்றோரும் உள்ளடங்குனின்றனர் என்பதைச் சுட்டிக்காட்ட முடியும்.

இவர்கள் பல ஹதீஸ்களை மறுத்துரைத்துள் காரணத்தினால் பகுதிவாரியான சுன்னா மறுப்புக் கோட்டபாட்டாளர்கள் என்று முஸ்லிம் உலகில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர்.

தென்னிந்தியாவில் இருந்தும், கேரளத்தில் இருந்தும் நவீன காலத்தில் ஸஹீஹான ஹதீஸ் மறுப்புக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாதங்களைப் பார்த்தால் இவர்களின் முன்னோடிகளாக சிலவற்றில் அல்லாமா ரஷீத் ரிளா, பலவற்றில் வழிகேடன் அபூரய்யா என்பவனும்தான் என்பது தெரியவருகின்றது. அதைக் காரணமாக வைத்தே **காப்பியடிக்கும் நவீன முஜ்தஹிதுகள் !!!** என்றும் நாம் தலைப்பிட்டோம்.

1- மூஸா நபி (அலை) அவர்கள் மலக்குல் மௌத் அவர்களைத் தாக்கியது.
2- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டது.
3- கொசுவின் ஒரு இறக்கையில் நோயும், மறு இறக்கையில் நிவாரணியும் இருக்கின்ற என்பது.
4- சூரியன் அர்ஷின் கீழ் சுஜூத் செய்வதற்காக சில நொடிகள் தாமதிப்பது.
5- இப்ராஹீம் நபி (அலை) தனது தந்தையை மறுமையில் சந்தித்து, கவலைப்பட்டு, அவரின் நிலை பற்றி அல்லாஹ்விடம் முறைப்பாடு செய்வது.
6- இசைக்கருவி பற்றிய புகாரியில் இடம் பெறும் நபி மொழி.
7- இரவில் மூன்றில் இருபகுதி கழிந்து ஒரு பகுதி இருக்கின்ற போது அல்லாஹ் கீழ் வானத்திற்கு இறங்கும் ஸஹீஹான நபி மொழி.
8- நபி (ﷺ) அவர்களின் நெஞ்சு பிளக்கப்பட்டதைக் குறிப்பிடும் நபிமொழி
9- ஈஸா நபியின் வருகையை உறுதி செய்யும் நபி மொழி.
10- தஜ்ஜால் வருகை பற்றிய ஹதீஸ்.
11- ஒரு காபிரைக் கொலை செய்த முஸ்லிம், அவனுக்காகக் கொலை செய்யப்படுவதில்லை என்ற நபி மொழி.
12- இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவனை (மார்க்கத்தை மாற்றிக் கொண்டவனை) நீங்கள் கொலை செய்யுங்கள் என்ற நபிமொழி.
13- கருப்பு நிற நாய், பெண் குறுக்கறுப்பதால் தொழுகை முறிந்து விடும்.

போன்ற ஸஹீஹான நபிமொழிகளை குர்ஆனுக்கு முரண்படுவதாகக் கூறியும், பகுத்தறிவிற்குப் பொருத்தமில்லை எனக் கூறியும் மறுக்கும் இவர்கள் முஜ்தஹிதுகள் போல புதிதாக வெளியிடும் செய்திகளை ஹதீஸ் கலை அறிஞர்களால் மறுத்துரைக்கப்பட்ட வாதங்களை முன்வைத்தனர்.

இவ்வாறானோரிடம் இருந்து காப்படியடித்தவர்களை முஜ்தஹிதுகள் என்று கூற முடியுமா? இவர்கள் யாரின் சிந்தனையைச் சரிகண்டார்களோ அவர்கள் அந்த துறையில் துறைபோகக் கற்றவர்கள் என்ற பட்டியலில் இடம் பெறவில்லை. அப்படி இடம் பிடித்திருந்தாலும் இவர்களின் ஆய்வுகள் ஏனைய ஹதீஸ்கலை அறிஞர்களின் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு புடம் போடப்படும்.

ஹதீஸ்களுக்குப் புறம்பான இவ்வாறான வாதங்களை அறிவுப்பூர்வமாகவும், ஆளமாகவும் ஹிஜ்ரி:1320ற் குப் பின் வாழ்ந்த எமனைச் சேர்ந்த அறிஞரான இமாம் அப்துர்ரஹ்மான் பின் எஹ்யா அல்முஅல்லிமீ (ரஹ்) அவர்கள்

الأنوار الكاشفة لما في كتاب أضواء على السنة من الزلل والتضليل والمجازفة **என்ற நூலில் மி**கத் தெளிவாக மறுத்துரைத்திருப்பதைப் பார்க்கின்றோம். இவரது மறுப்பு அவரது அறிவின் முதுமையையும், இஜ்திஹாதின் தரத்தையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

## சட்டத்தை அகழ்ந்தெடுக்கும் ஆற்றல் மிக்கவராக இருத்தல்.

இது அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆன் குறிப்பிடுகின்ற புத்திமதியாகும். இஸ்லாமிய மார்க்க மூலாதாரங்கள் அனைத்தும் அரபு மொழியுடன் தொடர்புடைய காரணத்தினால் அந்த மொழி பற்றிய அறிவு அவசிமாகும். அவ்வாறே அதில் இருந்து

சட்டங்களை அகழ்ந்தெடுக்கும் திறமையும், ஆற்றலும் உள்ளவராக இருப்பது அவசியமாகும்.

இத்தகையோர் மார்க்கத்தைப் போதனை செய்வதாலும், மக்கள் அவர்களின் தீர்ப்புக்களின் மீது தங்கி இருப்பதாலும் சட்டத்தை அகழ்ந்தெடுத்து முடிவு சொல்லும் ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கின்ற போது அது ஒரு குறையாகவே கொள்ளப்படும்.

மட்டுமின்றி, பிறர் செய்து வைத்த மொழிபெயர்ப்புகளின் மீது தங்கி நிற்பது மத்ஹபு சிந்தனையை ஒத்ததாகவும், தனிமனித வழிபாட்டின் மீது தங்கி இருப்பதாகவுமே கொள்ளப்படும். இது சமூகத்தில் சமாளிக்க முடியாத குழப்பங்களையே தோற்றுவிக்கும். கருத்துக்களை உரசிப்பார்த்து, ஒப்பிட்டு நோக்கும் திறமை கட்டாயமானதாகும்.

وَإِذَا جَاءَهُمْ أَمْرٌ مِنَ الْأَمْنِ أَوِ الْخَوْفِ أَذَاعُوا بِهِ وَلَوْ رَدُّوهُ إِلَى الرَّسُولِ وَإِلَى أُولِي الْأَمْرِ مِنْهُمْ لَعَلِمَهُ الَّذِينَ يَسْتَنْبِطُونَهُ مِنْهُمْ [النساء : 83]

**அவர்களிடம் பாதுகாப்பு, அச்சம் பற்றிய செய்தியில் எது வந்தாலும் உடனே அதைப் பரப்பிவிடுகின்றனர். அதை அவர்கள் அல்லாஹ்வின் தூதரிடமும், அவர்களில் அறிவு கொடுக்கப்பட்டவர்களிடமும் கொண்டு சென்றிருப்பார்களாயின் அவர்களில் அதை அகழ்ந்தெடுப்போர் அது பற்றி அறிந்திருப்பார்கள் (அந்நிஸா: வசனம்: 84) .**

அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா ? என்ற அல்குர்ஆனின் கேள்வி அறியாதவர்களை ஆலிமாக்க முனைவதையும், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பு, சீடிக்களின் முஃப்திகளான அழைப்பாளர்களுக்கும் ஆப்புவைக்கின்றது.

**நஸ் - نص சான்றாதரம் இல்லாத போதே இஜ்திஹாத்.**

இது இஜ்திஹாதில் முக்கியமாகக் கொள்ளப்படும் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். சான்றாதாரங்கள் முன்னால் இருக்கின்ற போது அவற்றில் இஜ்திஹாதில் ஈடுபடக்கூடாது.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُتْبَةَ قَالَ أَتَى ابْنُ مَسْعُودٍ فِي رَجُلٍ تَزَوَّجَ امْرَأَةً فَمَاتَ عَنْهَا وَلَمْ يَفْرِضْ لَهَا وَلَمْ يَدْخُلْ بِهَا فَسُئِلَ عَنْهَا شَهْرًا فَلَمْ يَقُلْ فِيهَا شَيْئًا ثُمَّ سَأَلُوهُ فَقَالَ أَقُولُ فِيهَا بِرَأْيِي فَإِنْ يَكُ خَطَأً فَمِنِّي وَمِنْ الشَّيْطَانِ وَإِنْ يَكُ صَوَابًا فَمِنْ اللَّهِ لَهَا صَدَقَةُ إِحْدَى نِسَائِهَا وَلَهَا الْمِيرَاثُ وَعَلَيْهَا الْعِدَّةُ فَقَامَ رَجُلٌ مِنْ أَشْجَعَ فَقَالَ أَشْهَدُ لَقَضَيْتَ فِيهَا بِقَضَاءِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي بِرْوَعَ ابْنَةِ

وَاشِقٍ قَالَ فَقَالَ هَلُمَّ شَاهِدَاكَ فَشَهِدَ لَهُ الْجَرَّاحُ وَأَبُو سِنَانٍ رَجُلَانِ مِنْ أَشْجَعَ – سنن الترمذي ، مسند أحمد – 17732

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்களிடம் திருமணமாகி மஹரை நிர்யமும் செய்யாது, மனைவியுடன் இல்லத்திலும் ஈடுபாடாது மரணித்தவரின் மனைவி பற்றி வினவப்பட்ட போது ஒரு மாத காலம் அது பற்றி எதுவும் கூறாதிருந்தார்கள். பின்பு அவர்களிடம் (அது பற்றி) கேட்ட போது எனது கருத்தினைக் கூறுகின்றேன், அது தவறாக இருப்பின் என்னாலும் (திறமைக்குறைவால்), ஷைதானின் மூலம் ஏற்பட்டதாகும். அது சரியானதாக இருக்குமானால் (அது) அல்லாஹ்விடம் இருந்துமுள்ளதாகும் எனக் கூறிவிட்டு .அந்தப் பெண்ணுக்கு அவளது சகோதரிகளின் மஹர் போன்று கொடுக்கப்படவேண்டும், அவளுக்கு மீராஸ் சொத்தில் பங்குண்டு, அவள் இத்தாவிலும் இருக்க வேண்டும் எனக் கூறினார்கள். உடனே அஷ்ஜஃ கோத்திரித்தைச் சேர்ந்த ஒரு மனிதர் எழுந்து, வாஷிக் என்பவரின் மகள் பர்வஃ என்பவர் விஷயத்தில் அல்லாஹ்வின் தூதர் தீர்ப்பளித்தது போன்றதொரு தீர்ப்பையே நீங்கள் தீர்ப்பாக முன்வைத்துள்ளீர்கள் என்றார். அதற்கு இரு சாட்சிகளை வேண்டினார்கள், அதற்கு ஜர்ராஹ், அபூஸினான் என்ற இருவர் சாட்சியம் கூறினார்கள். திர்மிதி, (முஸ்னத் அஹ்மத்) இது அபூதாவூத், திர்மிதி போன்ற கிரந்தங்களிலும் பதிவாகி இருக்கின்றது.

**அவசியமற்றதில் இஜ்திஹாத் செய்வது வேஷ்டாகும்.**

الأمور القطعيات / الثوابت என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அகீதா தொடர்பான நெகிழ்த்தன்மை அற்ற அம்சங்களில், மற்றும் மார்க்கம் பித்ஆ, சுன்னாவிற்கு முரண்பட்ட வழிமுறை என்று அறிமுகப்படுத்தியதில் இஜ்திஹாத் செய்வது அதன் நோக்கத்தை இல்லாதொழிக்கும்.

வணக்கவழ்பாடுகள் **توقيفي** வகையைச் சார்ந்தது என்பார்கள். அதாவது அல்குர்ஆனில், நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் நடைமுறையிலும் எவ்வாறு காட்டப்பட்டுள்ளதோ அவ்வாறே அவற்றை நடைமுறைப்படுத்துதல் என்ற கோட்பாடு.

இதை விளங்காது அதிலும் இஜ்திஹாத் செய்து, நவீன பித்அத்துக்களை உருவாக்குகின்ற நிலை உலமாக்கள் எனப்படுவோர் வட்டத்திலும் அவதானிக்க முடிகின்றது.

**لا اجتهاد في مسائل المنكرات** " மார்க்கம் தடுத்த அலம்சங்களில் **இஜ்திஹாத்** ஏற்றுக் கொள்ளப்படாது" **لا اجتهاد في مورد النص சான்றாதாரம் காணப்படும் போது இஜ்திஹாத் கிடையாது. போன்ற** விதிகளையும், புதிததாக உண்டுபண்ணப்படுபவைகள் அனைத்தும் பித்அத்களாகும், பித்அத்கள் யாவும் வழிகேடுகளாகும், அனைத்து

வழிகேடுகளும் நரகத்திற்குக் கொண்டு செல்லும் என்ற அல்லாஹ்வின் தூதரின் வரிகளையும் முஜ்தஹித் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இந்த விதியை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் ∴பத்வாக்குழு பின்பற்றி இருக்குமானால் ஐங்காலத் தொழுகைக்குப் பின்னால் கூட்டுப் பிரார்த்தனை பற்றிய குப்பை ∴பத்வாவை உயிர்ப்பித்திருக்கமாட்டாது என்பது நமது கருத்தாகும்.

**இஸ்லாமிய அறிவுத்தராதரத்தைப் பெற்றவர்களாக இருத்தல்.**

இஸ்லாத்தில் அறிஞர்கள் என்ற ஒரு சாரார் இருந்து கொண்டிருப்பதை இஸ்லாம் கட்டாயப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் தீர்ப்பளிக்கின்ற நிலை அங்கு கிடையாது. என்பதை பின்வரும் நபிமொழி உணர்த்துவடன், அறிஞர்கள் குழு என்பது பொதுமக்கள் குழுவில் இருந்து வேறுபட்டது என்பதையும் பின்வரும் நபிமொழி மூலம் மிகத் தெளிவாக விளங்கலாம்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِنَّ اللَّهَ لَا يَقْبِضُ الْعِلْمَ انْتِزَاعًا يَنْتَزِعُهُ مِنْ الْعِبَادِ وَلَكِنْ يَقْبِضُ الْعِلْمَ بِقَبْضِ الْعُلَمَاءِ حَتَّى إِذَا لَمْ يُبْقِ عَالِمًا اتَّخَذَ النَّاسُ رُءُوسًا جُهَّالًا فَسُئِلُوا فَأَفْتَوْا بِغَيْرِ عِلْمٍ فَضَلُّوا وَأَضَلُّوا (رواه البخاري – كتاب العلم باب كيف يقبض العلم ) (ومسلم في صحيحيه وبوَّبه النووي (رحمه الله) ببَاب رَفْعِ الْعِلْمِ وَقَبْضِهِ وَظُهُورِ الْجَهْلِ وَالْفِتَنِ فِي آخِرِ الزَّمَانِ )

நிச்சயமாக அல்லாஹ் கல்வியை தனது அடியார்களிடமிருந்து ஒரேயடியாக பறித்துவிடமாட்டான். எனினும் அறிஞர்களை கைப்பற்றுவதன் மூலம் அவன் கல்வியை கைப்பற்றுவான். கடைசியாக அவன் ஒரு அறிஞர்கூட மீதமில்லாமல் ஆக்கிவிட்டதும் மக்கள் அறிவீனர்களை தமது தலைவர்களாக்கிக் கொள்வர். அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டும், அவர்கள் அறிவின்றி மார்க்கத்தீர்ப்பும் வழங்குவார்கள். (இதன் மூலம்) தாமும் வழிகெட்டு பிறரையும் வழிகெடுப்பார்கள். அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்:- அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ؓ) அவர்கள். - ஆதாரம்:- புகாரி, முஸ்லிம்) இதை அல்லாஹ் இவ்வாறு கேட்கின்றான்

قُلْ هَلْ يَسْتَوِي الَّذِينَ يَعْلَمُونَ وَالَّذِينَ لَا يَعْلَمُونَ [الزمر : 9] (நபியே) அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா? நீர் கேளும் (அஸ்ஸுமர் 39 : 9) இது மார்க்கத்தை தெளிவாகக் கற்ற ஒரு பிரிவினர் இருப்பதை உறுதி செய்கின்றது.

**பின்வரும் ஏனைய தகைமைகள் பெற்றிருத்தல்.**

நாஸிஹ், மன்சூஹ், (மாற்றியது, மாற்றப்பட்டது), முத்லக், முகய்யத்- ஆம், (பொதுப்படையானது, வரையறுக்கப்பட்டது), ஆம், ஹாஸ்- பொதுவானது, குறிப்பானது, வசனம் பற்றிய வலாற்றுப் பின்னணி, அரபு மொழி அறிவு, அநாமோதய சொற்களின் விளக்கங்கள், ஹதீஸ், மற்றும் திரணாய்வுக்கலையில் தேர்ச்சி, அகீதா அம்சங்களில் தெளிவு, முன் சென்ற அறிஞர்களின் நூல்களில் காணப்படும் சொல்லாடல்களை

விளங்கும் திறன் போன்ற இன்னோரென்ன அமசங்கள் பற்றி அறிந்திருப்பது ஒருவரை **முஜ்தஹித்** என்ற நிலைக்கு கொண்டு செல்லும் காரணிகளாகும்.

இந்தத் தகுதிகள் பெற்ற சிலரே உலகில் அறிஞர்களாக இனம் காட்டப்பட்டனர், நாம் நம்மை முஜ்தஹிதுகள் என்று கூறவில்லை. மாற்றமாக அவர்களைத் தழுவி, சத்தியத்திற்கு நெருக்கமான, இறையச்சதிற்கு நெருக்கமான அம்சங்களை வெளிக் கொணர்கின்றோம்.

அதே வேளை! இவர்களிடம் இருந்து காப்பி அடித்தவர்கள் தம்மை சர்வதேச முஜ்தஹிதுகளாகவும், தமது அமைப்பே சொர்க்கம் செல்லும் அமைப்பாகவும் பறைசாட்டினால் நாம் என்ன செய்யலாம். இறுதி முடிவு அல்லாஹ்விடம்தான் இருக்கின்றது.